பாடில்லை. பல்கலைக் கழகங்களிலுள்ள அனைத்துத் துறைகளிலும், தமிழ்த் துறையைத் தவிர பிற துறைகளில் தமிழே இல்லை. கலைப் பாடங்கள், அறிவியல் பாடங்கள் என வரும் அனைத்துப் பாடங்களிலும் ஆய்வுகள் தமிழிலேயே நடைபெற வேண்டும் என கூறி எனது தொகுதி பிரச்சினைகள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.... (மணியடிக்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3-4-1990) காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

54. தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை சாமை மற்றும் மொச்சை ஆகியவற்றின் மீதான கொள்முதல் மற்றும் விற்பனையினை கட்டுப்படுத்துதல் குறித்து வேளாண்மைத் துறையின் 24-7-89 ஆம் நாளிட்ட 528 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

55. குறிப்பிட்ட சில வேளாண்மை விளைபொருள்களை பொறுத்தவரை ஆலங்குளம் அங்காடியினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 26-10-89-ஆம் நாளிட்ட 804-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

56. கொள்ளினை பொறுத்தவரை சேலம் மாவட்டத்தினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 13-12-89-ஆம் நாளிட்ட 946-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1990 ஏப்ரல் 2]

57. சென்னை உசைனி டிரஸ்டுக்கு சொந்தமான டி.எம்.வி. 1864 எண் கொண்ட மோட்டார் வண்டிக்கு சலுகை முறையில் வரி விதிப்பது குறித்து உள் துறையின் 1-1-1989-ஆம் நாளிட்ட 2362-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

54. கோரிக்கை எண் 17—தமிழ் வளர்ச்சி—பண்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

55. கோரிக்கை எண் 17—தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

56. கோரிக்கை எண். 17—தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

57. பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழிற் கல்வி பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

58. கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

59. காட்டுவளத் துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

60. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (மூன்றாவது பட்டியல்).

61. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவதுப் பட்டியல்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS